### முதல்வர் மு.க.ஸ்டாலினின் ‘நான் முதல்வன்’ உள்ளிட்ட திட்டங்களால்

# திறன்மிக்க இளைஞர்களின் தலைநகராய் விளங்குகிறது தமிழ்நாடு!

## மாதவரத்தில் – அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!



சென்னை,மார்ச்.21-

முதல்வர் மு.க. ஸ்டாலினின் ‘நான் முதல்வன்’ உள்ளிட்ட திட்டங்களால் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகராய் விளங்குகிறது தமிழ்நாடு என்று மாதவரத்தில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

சென்னை, மாதவரம், ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:

நாடாளுமன்றத்திற்கு பிரதமர் செங்கோலை வைத்துவிட்டால் மட்டும் போதாது செங்கோல் தவறாமல் பாரபட்சம் இல்லாமல் ஆட்சி நடைபெற வேண்டும். நாட்டின் நலனுக்காக மக்கள் தொகை கட்டுப்பாட்டை முனைப்பாகச் செயல்படுத்திய ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரிதிநிதித்துவம் குறைக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது.

மக்கள் தொகை கட்டுப்பாட்டை அனைத்து மாநிலங்களும் முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலேயே நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்து வரையறுக்கப்படும் என்று கடந்த 2000ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் உறுதி அளித்தார், அதே கட்சியின் தற்போதைய பிரதமர் மோடி மீறுகிறார்.

தொகுதி மறுசீரமைப்புக்கு தமிழ்நாடு எதிரானதாக இல்லை, அதேசமயம் கடந்த ஐம்பதாண்டுகளாக சமூக, பொருளாதார நலத் திட்டங்களைச் சிறப்புற செயல்படுத்தியதற்கான தண்டனையாகத் தொகுதி மறுசீரமைப்பு அமைந்துவிடக் கூடாது. தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய ஆபத்தை ஒன்றிய அரசு ஏற்படுத்தி இருக்கிறது. இந்த பிரச்சினையில் தென்னிந்தியாவின் முதல் குரலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் எதிரொலித்துள்ளார்கள்.

கோவையில் பேசிய ஒன்றிய உள்துறை மந்திரி அமித்ஷா, நாங்கள் மறுசீரமைப்பில் தமிழ்நாட்டிற்கு ஒரு தொகுதியை கூட குறைக்க மாட்டோம் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். ஆனால் உத்திரபிரதேசம், பீகார் மாநிலங்களுக்கு எவ்வளவு உயர்த்துவோம் என்று சொல்லவில்லை. இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் ஒன்றிய அரசு அவர்களுக்குள் பேசி கொண்டு இருக்கிறார்கள் என்று தெள்ளத்தெளிவாக புரிகிறது.

மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்ற மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, ஆந்திரா, கேரளா, கர்நாடகம், பஞ்சாப், ஒடிசா, மேற்கு வங்காளம், இமாச்சலப்பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் பலத்த சேதத்தை ஏற்படுத்தும். 50 மாநிலங்களை கொண்ட அமெரிக்காவில் 100 ஆண்டுகளாக தொகுதிகளின் எண்ணிக்கையை மாற்றாமல் தக்க வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கேயும் இதே பிரதிநிதித்துவ ஜனநாயகம் தான் நடைமுறையில் இருக்கிறது.

இந்தி பேசுகிற மாநிலங்களின் ஆட்சி தான் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற திட்டத்துடன் அவர்கள் காய் நகர்த்துகிறார்கள். அதை மறந்து விடக் கூடாது. தமிழ்நாட்டின் நலன், எதிர்காலம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தாங்கள் பங்கேற்கத் தவறிவிட்டோம் என்பதை கதைச் சொல்லி தலைவர்கள் உணரும் காலம் வரும். (சீமான்) தேச நலனுக்காக மக்கள் தொகை கட்டுப்பாட்டில் பங்கேற்ற தமிழ்நாட்டு மக்களுக்கு தொகுதி மறுவரையறை வெகுமதியா, தண்டனையா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். சமச்சீரான விகிதத்தில் தொகுதி எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். இது ஒரு கட்சியின் பிரச்சினை அல்ல. தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டிய பிரச்சினையாகும். தமிழகத்தின் உணர்வை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

தொகுதி மறுசீரமைப்பு தென்னிந்திய மாநிலங்களை அதிகளவு பாதிக்கக் கூடும்.

நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுவரையறையை ஒன்றிய அரசு தன்னிச்சையாக முன்னெடுக்குமானால், அது தென் மாநிலங்களின் அரசியல் முக்கியத்துவத்தை முற்றிலும் அழிப்பதற்கான முயற்சியாகவே பார்க்கப்படும். ஒரு சில வட மாநிலங்களில் மட்டும் வெற்றி பெற்று, மத்தியில் ஆட்சி அமைத்து விடலாம் என்ற சூழ்நிலை உருவானால் அது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

ஒன்றிய அரசானது தமிழ்நாடு அரசை தொடர்ந்து புறக்கணித்தும் வஞ்சித்தும் வருகிறது. தமிழ்நாடு, ஒன்றிய அரசுக்கு வரியாக ஒரு ரூபாய் அளித்தால், 29 பைசாதான் திரும்பக் கிடைக்கும். ஆனால், உத்திர பிரதேசத்திற்கு 2 ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ் ஒன்றிய அரசிடம் இருந்து வர வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதி நிலுவையில் உள்ளது.

நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒன்றிய அரசின் மானியத் தொகை. 1.5 இலட்சம் மட்டுமே திட்டத்தின் பெயர் மோடி வீடு வழங்கும் திட்டம், ஆனால் தமிழ்நாடு அரசானது, வீடு ஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன்சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து ஏழ்மை நிலையில் இருக்கும் மக்களின் சொந்த வீட்டிற்கான கனவினை நிறைவேற்றி வருகிறது.

மேலும் நமது அரசின் கீழ் செயல்படுத்திவரும் “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தின் கீழ், மாநில அரசின் மானியமானது 3.53 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. நூறுநாள் வேலைத்திட்டத்தில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட அதே 86 ஆயிரம் கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் கூட உயர்த்தவில்லை. இந்த நிதி ஒன்பது மாதம் கூட போதாது. இன்னும் சிறிது காலம் சென்றால் 30 நாள் வேலைத் திட்டம் என பெயர் மாற்றுவது ஒன்று தான் பாக்கி.

இந்த ஓரவஞ்சனைகளுக்கு காரணம் காங்கிரஸ் கொண்டு வந்தது என்பதாலும் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் உள்ளதால் இத்திட்டத்தை பாஜக அரசு ஒழிக்க பார்க்கிறது. கோட்சே பெயரில் திட்டம் பாஜக கொண்டு வந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்குப் பின்னரும் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் சீரிய ஆட்சியால் தமிழ்நாடு வளர்ச்சி அடைந்துள்ளது.

வேதியியலுக்கான நோபல் பரிசு (2009) வென்ற வெங்கி இராமகிருஷ்ணன் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், இந்திய அளவில் மிகவும் முன்னேறிய மாநிலம் தமிழ்நாடுதான். எந்த அளவீடுகளை எடுத்துக்கொண்டாலும் தென்மாநிலங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. தமிழ்நாடு குறிப்பாக பெண் உரிமை, பெண் சுகாதாரம், குழந்தைகள் நலன், கல்வி உள்ளிட்ட பல விஷயங்களில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களை ஒப்பிட்டால் நிச்சயம் தமிழ்நாடு தனித்து தெரியும்.

தென்இந்தியாவை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு முன்னேற அனுமதித்தால், தெற்கு ஆசிரிய நாடுகளுக்கு இணையாக தென்இந்தியா வளரும் என பேட்டி அளித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் கடந்த 31.01.2025 அன்று 2024 25ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே தமிழ்நாடு அரசின் பல்வேறு சாதனைகளுக்கு பாராட்டுதல்கள் சொல்லப்பட்டுள்ளது, அந்தளவுக்கு தமிழ்நாடு பல்வேறு வழிகளில் வளர்ந்து வருகிறது.

மருத்துவம், கல்வி, சமூக நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக இருக்கிறது. “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்“, மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்துள்ளது. கட்டணமில்லாத மகளிர் விடியல் பயணமானது மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. சமூகத்தில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்துள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பள்ளிக் குழந்தைகளின் பள்ளி வருகையை அதிகரித்துள்ளது. அவர்களது கவனிக்கும் திறனை மேம்படுத்தி உள்ளது. புதுமைப் பெண் திட்டத்தால் மாணவியரின் உயர்கல்விச் சேர்க்கை அதிகரித்துள்ளது.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி வழங்குவதால் இந்தியாவின் திறன்மிக்க இளைஞர்களின் தலைநகரமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. ஆண்டுதோறும் 15 லட்சம் பேர் உயர் சிகிச்சை பெற தமிழ்நாடு வரும் அளவுக்கு மருத்துவத் தலைநகராக தமிழ்நாடு திகழ்கிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகளின் முகமைகளுக்கு இடையேயான விருதைப் பெற்றுள்ளது. மகளிர் பாதுகாப்பை உறுதி செய்ய தவறிய திமுக அரசை மாற்றுவோம் என நடிகராக இருந்து ஒய்வு பெறும் காலத்தில் அரசியல்வாதியாக அரிதாரம் பூசியவர் கூறுகிறார்.

அமைதியான மாநிலமாக இருப்பதால் பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என ஆய்வுகள் கூறுகின்றது. இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில் 41 விழுக்காடு பெண்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். தேசியக் கல்வி கொள்கை, மும்மொழி கொள்கை என்ற பெயரில் 3,5 மற்றும் 8ஆம் வகுப்பிற்கும் மற்றும் இளங்கலை பட்டப்படிப்புக்கே நுழைவு தேர்வு மீண்டும் கொண்டு வர ஒன்றிய அரசு முயற்சி செய்து கல்வியை ஒரு சாரார்க்கு மட்டுமே கொண்டு சேர்க்க முயற்சி செய்கிறது.

பாஜக கட்சியினர் மாணவர்களிடம் மிட்டாய் மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவு கோரி கையெழுத்து இயக்கம் நடத்தி வருகின்றனர். மாணவர்களிடம் மிட்டாய் கொடுக்க வருபவர்களை பூச்சாண்டிகள் என்பதை பெற்றோர்கள் அறிந்திருப்பார்கள். மிட்டாய் கொடுத்து கையெழுத்து வாங்கும் தாங்களை, நாங்கள் பூச்சாண்டிகளாக தான் பார்ப்போம். நாங்கள் கையெழுத்து இயக்கம் நடத்தினால் தாங்க மாட்டிரீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையின் படிதான் சீரமைப்பு செய்ய முடியும் என்ற மூர்க்கத்தனமாக ஒன்றிய பாஜக முடிவுக்கு வந்தால், அதனை எதிர்க்க தமிழ்நாடு போராடும்...தமிழ்நாடு வெல்லும்...

இவ்வாறு அவர் பேசினார்.

---

### சாட்டையால் அடித்துக் கொண்டார்கள்: அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல்

# ‘சோதனை’ என்ற பெயரில் அவதூறுகளை பரப்புகிறார்கள்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் செந்தில் பாலாஜி விளக்கம்!



**சென்னை, மார்ச்.21-**

**சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது குறுக்கிட்டு அமைச்சர் செந்தில்பாலாஜி பேசுகையில் அரசின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல் சோதனை என்ற பெயரில் அவதூறுகளை பரப்புகிறார்கள். சாட்டையால் அடித்துக் கொண்டார்கள் என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் செந்தில் பாலாஜி பேசியதாவது :-

மொத்தமாக 4 ஆண்டுகளாக ஓர் அரசியல் கட்சி நம்முடைய மாநிலத்தில் தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதலமைச்சர், தளபதி அவர்களினுடைய ஆட்சியின் சாதனைகளை பொறுத்துக்கொள்ள முடியாமல் மக்களிடத்தில் எப்படியாவது ஓர் அவப்பெயரை உருவாக்க வேண்டும்; கெட்ட நோக்கத்தோடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக மக்களிடத்தில் ஒரு குழப்பத்தை உருவாக்க வேண்டுமென்று பூதக் கண்ணாடி போட்டு தேடிப் பார்த்தார்கள். ஒன்றுமே கிடைக்கவில்லை; கொஞ்ச நேரம் சாட்டையில்கூட அடித்துக் கொண்டார்கள். எதுவுமே கிடைக்க வில்லை.

கடைசியாக அவர்கள் கையிலிருக்கக்கூடிய ஒரு துறையை கையில் வைத்துக்கொண்டு, சோதனை என்ற பெயரில் சம்பந்தமில்லாதவர்களின் இடத்திலெல்லாம் சோதனை நடத்தி, அந்தத் துறைக்கும் அந்த நபர்களுக்கும் சம்பந்தமே இல்லை. அவர்களிடத்திலெல்லாம் சோதனை நடத்தி, கடைசியாக ஒரு பத்திரிகைச் செய்தி. 143 2025 அன்று நிதிநிலை அறிக்கை என்றால், 1332025 மாலை அவசர அவசரமாக ஒரு பத்திரிகைச் செய்தி கொடுக்கிறார்கள். காரணம் என்னவென்றால், நிதிநிலை அறிக்கையில் வரக்கூடிய திட்டங்கள், நாட்டு மக்களிடத்தில் சென்றுவிடக் கூடாது; முதலமைச்சருக்கு இருக்கக்கூடிய நற்பெயரை பொது மக்கள் பாராட்டிவிடக் கூடாது என்ற குறுகிய மனப்பான்மையோடு அவசர அவசரமாக அந்தப் பத்திரிகை செய்தி வருகிறது.

அந்தப் பத்திரிகை செய்தி வருவதற்கு முன்பாகவே அந்தக் கட்சியினுடைய தலைவர், அந்த எண்ணிக்கையை சொல்கிறார். ஒரு நாள் முன்னாடி சொல்கிற செய்தி, அடுத்த நாள் பத்திரிகை செய்தியாக வருகிறது. நாங்கள் இன்றுவரை கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

செய்தி வந்த பிறகு அடுத்த நாளும் நாங்கள் கேட்டோம். எதன் அடிப்படையில் அந்தச் சோதனை நடைபெற்றது? எந்த முதல் தகவல் அறிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது? எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை? இதுவரை அதற்கு விளக்கமில்லை. இதுவரையில் அதற்கு விளக்கமில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் அவர்கள் முன்னாடி எடுத்துச் செல்கிறார்கள். என்னவென்றால், 4 ஆண்டு காலம் செய்யப்பட்ட சாதனை, இந்த பட்ஜெட்டில் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற வரலாற்று சிறப்புமிக்க திட்டங்கள் ஆகியவை மக்களிடத்தில் சென்றுவிடக் கூடாது என்ற குறுகிய மனப்பான்மையோடு அரசின்மீது அவதூறுகளை பரப்பலாம். குறுகிய நோக்கத்தோடு மக்களிடத்தில் ஒரு மோசமான சூழ்நிலையை எடுத்துச்செல்லலாம் என்று அவர்கள் எண்ணுகின்ற எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கணக்கு அவர்களுடைய மனக் கணக்கு. உறுப்பினருக்கு நான் ஒன்றை சொல்லிக்கொள்கிறேன்.

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் வாக்குறுதியில் TASMAC குறித்து எந்தவிதமான வாக்குறுதியும் இடம் பெறவில்லை. முதலில் எடுத்து படித்துப் பாருங்கள். படிப்படியாகக் குறைப்போம் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட எந்த வாக்குறுதியும் அதில் இல்லை. இருந்தபோதும் கூட, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் மக்கள் நலன் கருதி 603 கடைகளை குறைத்திருக்கின்றார். அறிவிப்பில் 500 கடைகள்தான் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், 103 கடைகள் பொது மக்கள் வேண்டாமென்று சொன்ன இடத்தில், பள்ளி, கல்லூரிகள், ஆலயங்கள் இருந்த 103 கடைகள் மூடப்பட்டு, மொத்தமாக 603 கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, அரசு என்பது சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, படிப்படியாக முழுவதுமாக இரும்புக்கரம் கொண்டு அடக்கக்கூடிய ஓர் அரசை முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல், எப்படியாவது அவதூறுகளைப் பரப்பி, மக்களிடத்தில் ஒரு தீய கருத்தைக் கொண்டு சென்றுவிடலாம் என்று நினைக்கின்றார்கள். ஒரு போதும் அது ஈடேறாது. ஒருபோதும் நிறைவேறாது. மீண்டும் ஒரு முறை கேட்கிறேன். எந்த முதல் தகவல் அறிக்கை? எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட தகவல் அறிக்கை என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லாமல், சோதனை என்ற பெயரில், அரசின்மீது அவதூறை பரப்புவதற்கு முயற்சி செய்வது ஒருபோதும் ஈடேறாது.

இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலளித்தார்.

---

### பெண்களுக்கும் தாய்மார்களுக்கும் – குழந்தைகளுக்கும்

# ஊட்டச்சத்தினை உறுதி செய்யும் திட்டம்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கீதாஜீவன் தகவல்!



சென்னை, மார்ச். 21-

சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும் போது அமைச்சர் கீதா ஜீவன் குறுக்கீட்டு தமிழ்நாட்டில் பெண்களுக்காக ஊட்டச்சத்தை உறுதி செய்யும் வகையில் திட்டம் செயல்படுத்தி வருகிறது என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் பி.கீதாஜீவன் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் திட்டமான Poshan Abhiyaan-ஐவிடக் கூடுதலாகவும், தனியாகவும் ஊட்டச்சத்தினை உறுதி செய்கின்ற திட்டம் தமிழ்நாடு அரசில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், எடை குறைவாகப் பிறந்த குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கும் என்று செய்யப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதுஒட்டுமொத்தமாக ஒரு விழிப்புணர்வு செய்து கொண்டேதான் இருக்கிறோம். ஏனெனில், பிள்ளைகள் நம் குடும்பத்திலேயே நாம் check செய்து பார்த்தால் தெரியும். பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும், சிறு குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடு இருக்கிறது. காரணம், அவர்களுடைய food habits. அந்த பழக்கவழக்கங்கள் இருப்பதால் தொடர்ந்து awareness செய்து கொண்டிருக்கிறோம். எல்லோரும் இணைந்து செய்தால் நிச்சயமாக ஒரு சமூக மாற்றமே உருவாகும். அப்போதுதான் பெண்கள் மற்றும் குழந்தைகளினுடைய ஊட்டச்சத்தை நாம் நிலைநிறுத்திட முடியும். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக இதில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அரசும், இந்தத் துறையும் செய்து வருகிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் பதிலளித்துப் பேசினார்.

---

### முன்னாள் புதுக்கோட்டை மாவட்ட அவைத் தலைவர்

# பொன்பேத்தி இரா.துரை மாணிக்கம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



புதுக்கோட்டை. மார்ச் 21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் ஆவுடையார் கோவில் ஒன்றியம் பொன்பேத்தி (சடையா மங்கலம்) கிராமத்தைச் சேர்ந்தவர் இரா.துரைமாணிக்கம். இவர் 19.03.2025 புதன்கிழமை அன்று மதியம், வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார். இவருக்கு வயது 84. கழக மூத்த முன்னோடி, முன்னாள் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட கழக அவைத்தலைவர், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர், இரண்டு முறை முன்னாள் ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர்.

இவர் கழகம் அறிவுத்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறைக்கு சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மிசாவில் 1 ஆண்டு சிறையில் இருந்தவர். இவர் கழகத் தலைவர் கலைஞர் அவர்களின் மீது மிகவும் அன்பு கொண்டவர். அனைத்துக் கட்சியினரிடமும் அன்பாக பழகக் கூடியவர்.

இவரது உடல் அவரது இல்லத்தில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது . இவரது உடல் நேற்று (20.3.2025 -வியாழன்) மாலை 4 மணியளவில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சொந்த கிராமமான சடையாமங்களத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரது உடலுக்கு பொதுமக்கள், கழகத்தினர், கழக முன்னோடிகள், உறவினர்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர் .

---



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில், தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.அய்யனார் தலைமையில், தகடி ஊராட்சியில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### கவிஞர்

# நெல்லை இராமச்சந்திரன் மறைவு!

## தமிழறிஞர்கள் அஞ்சலி!



நெல்லை, மார்ச்.21-

திராவிட இயக்கத்தின் முதுபெரும் கவிஞர் தன் நெருப்புக் கவிதைகளால் உலகத் தமிழர்களை தட்டி எழுப்பிய பெருமகனும் உவமை கவிஞருக்கு பிறகு உவமைக் கவிஞராக திகழ்ந்த திராவிடத் தீயின் எச்சமாகவும் தமிழின் மிச்சமாகவும் உள்ளவர் என கவிப்பேரரசு வைரமுத்துவினால் புகழப்பட்ட வரும் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனின் நண்பருமான கவிஞர் பெருந்தகை நெல்லை ராமச்சந்திரன் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் ஏராளமான தமிழறிஞர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த நெல்லை இராமச்சந்திரன் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 77 வது வட்ட செயலாளர் பி.எஸ். தஞ்சை மதி தலைமையில் அப்பகுதியில் உள்ள பள்ளிகளில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி முதியோர் இல்லம் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அறுசுவை உணவுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வட்டச் செயலாளர் கண்ணன், சௌந்தர்ராஜன், முகமது ரபிக், ஜெயகுமார், பேச்சியம்மாள், கார்த்திக், பாண்டியராஜன், சூர்யா, கந்தப்பன், அமுதா, அருள் முத்து யோகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.